## பாடம் 01

# நாங்கள் வாக்களிப்போம்

அமிலன், சரோஜினி, ராதா, ஆகியோர் தரம் நான்கில் கல்வி பயிலும் நண்பர்கள் ஆவர். அவர்கள் மூவரும் ஒன்றாகத்தான் பாடசாலைக்கு வருவார்கள். அன்று வகுப்பறையைச் சுத்தம் செய்ய வேண்டியிருந்ததனால் ராதாவும் சரோஜினியும் நேரத்தோடு பாடசாலைக்கு வந்தார்கள். இது நாள் வரை காணாத ஒரு அட்டை வகுப்பறையில் தொங்கவிடப்பட்டிருந்ததைக் கண்டார்கள். இது என்ன? இரண்டு பேர் அதை வாசிக்கத் தொடங்கினார்கள்.


### அறிவித்தல் அட்டை

சிறியோராகிய உங்களுக்கு:

* காலையில் எழுந்தவுடன் இறைத் தந்தையுடன் உரையாடுங்கள்.
* உங்களுக்கு உரிய வேலைகளைச் சரியாகவும் நல்ல முறையிலும் செய்யுங்கள்.
* உங்களிடம் உள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
* எப்போதும் உண்மை பேசத் தயங்காதீர்கள்.
* பிழையான செயல்களில் ஈடுபடாதீர்கள்.
* பிழை விடுவது மனித இயல்பு. ஆயினும். மன்னிப்பளிப்பது இறைப்பண்பு என்பதையும் மறவாதீர்கள்.
* இறைத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுங்கள்.

கொஞ்ச நேரத்தில் வகுப்பு மாணவர்கள் எல்லோரும் தன்னைச் சுற்றிக் கொண்டு சுவரொட்டியை வாசிப்பதைச் சரோஜினி கண்டாள். அவள் வாசித்து முடித்தபடியால் விரைவாக வகுப்பறையைக் கூட்டிச் சுத்தம் செய்யத் தொடங்கினாள். அப்போது ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார். பிள்ளைகள் எல்லோரும் அறிவிப்புப் பலகையிலிருப்பதை வாசிப்பதைப் பார்த்தார். அவருக்குச் சந்தோசம் தாங்கவில்லை.

சரோஜினியும் ராதாவும் வகுப்பைக் கூட்டி முடித்துவிட்டு வகுப்பறைக்கு வந்தார்கள். பிள்ளைகள் எல்லோரும் எழுந்து நின்று ஆசிரியருக்கு வணக்கம் செலுத்தினார்கள். ராதா எழுந்து ''டீச்சர் இன்று எங்களுடைய அறிவிப்புப் பலகையில் நல்ல அறிவுரைகள் சில எழுதப்பட்டிருந்தன. நாங்கள் அனைவரும் அதை வாசித்தோம்'' என்றாள். மிகவும் நல்லது. நாம் நமது அன்பான இறைத் தந்தையின் பிள்ளைகள் என்ற முறையில் புதிய வகுப்பில் நாம் இறைத் தந்தைக்காக நல்ல வேலைகளைச் செய்வோம்.



அன்பான பிள்ளைகளே நாம் காலையில் எழுந்தவுடன் இறைத் தந்தையுடன் கதைத்து நமது கடமைகளை ஒழுங்காகச் செய்வோமானால், இருப்பதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள் வோமானால், எவ்வேளையும் உண்மை பேசுவோமானால், மற்றவர்களுடைய பிழைகளை மன்னிப்போமானால் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுகிறோமல்லவா? நீங்கள் இப்படிச் செய்தால் இறைத் தந்தை நம்மில் மகிழ்ச்சி அடைவார். எனவே எப்போதும் இறைத் தந்தையை மகிமைப்படுத்தவும், சந்தோஷப்படுத்தவும் முயற்சி செய்யுங்கள்.

**உங்களால் செய்ய முடியுமா?**

பின்வரும் பயிற்சியை உங்கள் கொப்பியில் எழுதி; அதன் எதிரே அவை சரியாயின் " (√) " எனவும் பிழையாயின் " (x) " எனவும் அடையாளமிடுங்கள்.

1. ஒவ்வொரு நாளும் வகுப்பறையைச் சுத்தம் செய்வது எமது கடமையாகும்.
2. சுவரொட்டியில் அருட் கொடைகள் ஏழும் எழுதப்பட்டிருந்தன.
3. நிமல் தான் செய்த பிழைக்கு மன்னிப்புக் கேட்டது ஒரு நல்ல செயல் ஆகும்.
4. நாங்கள் எப்போதும் மற்றவர்களுடைய தேவைகளைக் கேட்டு அறிய வேண்டும்.
5. பொய் சொல்லுவதன் மூலம் வெற்றி பெறலாம்.

* வகுப்பறையிலுள்ள சுவரொட்டியை மீண்டும் ஒரு முறை வாசியுங்கள்.
நீங்களும் அதைப் போன்ற அறிவுரைகளைக் கொண்ட சுவ ரொட்டியைத் தயார் செய்யுங்கள்.
அப்படியான அறிவுரை வசனங்களை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.